**ஒதுக்கீட்டுத் தலைப்பு 274 – அனுராதபுரம் மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2010 ஆம் ஆண்டு**

**1. மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்**

(அ) வறுமைக் குறைப்பிற்கு மூலாதாரமாகவிருத்தல், விநியோகம் மற்றும் முகாமைத்துவம் என்பன.

(ஆ) இடர் நிவாரணம் மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களை நிர்வகித்தல்.

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களைத் திட்டமிடலும் நிர்வகித்தலும்.

(ஈ) தேர்தல் ஒருங்கிணைப்பு

(உ) மாவட்டச் செயற்திட்டங்களினது நிர்வாகமும் செயற்பாடும்.

(ஊ) வருவாய்ச் சேகரிப்பு.

(எ) பிரதேச மட்டத்திலும் கிராம மட்டத்திலும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஸ்தாபனங்கள் மூலமாக அரசாங்க நடவடிக்கைகளை நடாத்துதல் மற்றும் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ஏ) பிற அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் பிரதிநிதியாகச் செயற்படுதல்.

(ஒ) மாகாண சபைப் பணிகளுக்கு உதவியளித்தல்.

**2. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

(அ) கிழக்கு நுவரகம் பலாத

(ஆ) மத்திய நுகரகம் பலாத

(இ) தலாவ

(ஈ) கலென்பிந்துனுவெவ

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்வாக அமைச்சு | | | |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 6,072,061 | 5,893,283 | 178,778 |
| 127 | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 306,000 | 199,326 | 106,674 |
| 133 | தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு | 13,598,102 | 10,290,390 | 3,307,712 |
| 134 | தேசிய மொழிகள் மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சு | 31,750 | 31,250 | 500 |
| 138 | சுதேச வைத்திய அமைச்சு | 62,992,306 | 60,375,306 | 2,617,000 |
| 139 | கடற்றொழில் நீரியல்வள அமைச்சு | 86,832 | 86,622 | 210 |
| 142 | தேசிய மரபுகள் மற்றும் கலாசார அமைச்சு | 7,038,275 | 7,029,765 | 8,510 |
| 145 | புனர்வாழ்வு அமைச்சு | 16,648,214 | 13,356,236 | 3,291,978 |
| 152 | நீர்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு | 2,930,483 | 2,662,893 | 267,589 |
| 153 | காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | 2,620,281 | 2,435,076 | 185,205 |
| 156 | இளைஞர் விவகார அமைச்சு | 942,350 | 798,169 | 144,181 |
| 160 | சுற்றாடல் அமைச்சு | 422,500 | 405,852 | 16,648 |
| 174 | புனர்வாழ்வு சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சு | 861,250 | 861,250 | - |
| 201 | பௌத்த விவகார திணைக்களம் | 10,378,655 | 10,045,564 | 333,091 |
| 206 | கலாசாரத் திணைக்களம் | 6,500 | 6,500 | - |
| 210 | தகவல் திணைக்களம் | 8,000 | 7,957 | 43 |
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் | 4,646,245 | 4,469,575 | 176,670 |
| 217 | நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் | 6,180,565 | 5,779,622 | 400,943 |
| 218 | சமூர்த்தி ஆணையாளர்நாயகத் திணைக்களம் | 443,270,303 | 434,422,576 | 8,847,727 |
| 226 | குடிவுரவு, குடியகல்வுத் திணைக்களம் | 225 | 210 | 15 |
| 227 | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் | 28,716 | 22,920 | 5,796 |

## 4.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கிட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

ஒதுக்கீட்டுக் கணக்கும் கணக்கிணக்கக் கூற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 148, 149, 150, 152 ஆகிய உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு ஏற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகளையும் கணக்கிணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடலும், அமுல்படுத்தலும் பேணிவருதலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 4.5 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் கூற்றுக்கள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றின் பிரகாரம், அனுராதபுரம் மாவட்டச் செயலக ஒதுக்கீட்டுக் கணக்கும் கணக்கிணக்கக் கூற்றும் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (ஆ) வரையிலான பொது அவதானிப்புரைகள் மற்றும் 4.6 தொடக்கம் 4.15 வரையிலான பந்திகள் என்பவற்றில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புரைகளுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்படுகின்றது.

### (அ) கட்டுநிதிக் கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்டச் செயலகத்தின் கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 210,872 செலவு மீதி இருந்ததுடன் அம் மீதியானது ஓராண்டிற்கு மேற்பட்டனவும் ஆகும்.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று

மாவட்டச் செயலகம் சமர்ப்பித்த கணக்குகளின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை

(ii) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் சகல பிரதேச செயலகங்களிலும் ஆட்களைப் பதிவு செய்யும் கிளை அலுவலகங்களை அமைப்பதற்காக அமுலாக்கப்பட்ட செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கஹடகஸ்திகிலிய, இபலோகம, தலாவ, திரப்பனே, கலெள்பிந்துனுவெவ, விலச்சிய, கல்னேவ, நொச்சியாகம, தம்புத்தேகம, மிஹிந்தலை, ரம்பேவ ஆகிய பிரதேச செயலகங்களுக்கு 2008 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 7,682,090 நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 7,578,316 செலவு செய்தவாறு கிளை அலுவலகங்களை அமைத்திருந்த போதும், இதுவரை அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பமாகவில்லை. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் பௌதீக மற்றும் மனிதவளம் மற்றும் தேவையான அறிவுறுத்தல் என்பன வழங்கப்படாமையே இந்நிலைமைக்கான காரணம் என மாவட்டச் செயலாளர் அறிவித்திருந்தார்.

(ஆ) பெறவேண்டிய மீதி
-------------------------------

நெல் கொள்வளவிற்காகப் பல்வேறு நிறுவகங்களுக்கும் வழங்கப்பட்ட முற்பணம் 6 மாதங்களுக்குள் திருப்பிப் பெறப்பட வேண்டும். எனினும், 2001, 2004/2005 மற்றும் 2005/2006 ஆம் ஆண்டுகளில் 6 நிறுவனங்களுக்கு மாவட்டச் செயலாளரால் வழங்கப்பட்ட முற்பண அறவீடு நலிவடைந்த நிலையில் இருந்தன. 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த முற்பணம் ரூபா 78,274,586 ஆகும்.

(இ) தீர்த்து வைக்கப்படாத முற்பணம்
---------------------------------------------------------

அனுராதபுரம் மாவட்ட சமுர்த்தி அதிகார சபையால் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓராண்டைக் கடந்தும் தீர்த்து வைக்கப்படாது உள்ள நிலுவை ரூபா 230,700 ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| | | | சபை மற்றும் இபலோகாம, தலாவ, கல்னேவ, திரப்பனே, தம்புத்தேகம, கலென்பிந்துனுவெவ ஆகிய பிரதேச செயலகங்கள் என்பவற்றிலுள்ள வாகனங்களது எரிபொருள்நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. |
| | 2009 ஜுன் 12 ஆந் திகதிய HA/DA/12/27 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | ரம்பேவ பிரதேச செயலாளர் தனது உத்தியோகபூர்வ மனையில் குடியிருக்காமையால் மனை பாதிப்பிற்குள்ளாகியிருந்தது. |
| (உ) | பிற சுற்றறிக்கைகள் | | |
| | திட்டமிடல் அமைச்சின் செயலாளரது 2008 ஜனவரி 25 ஆந் திகதிய MPI/DCM/1/2008 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 328,170 | விவசாய அமைப்புக்களது பாவனைக்காக வழங்கப்பட்ட 408 மண்வெட்டிகள் இபலோகம, மஹவிலச்சிய கல்னேவ, தம்புத்தேகம ஆகிய பிரதேச செயலகங்களது பட்டோலைப் பொருள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட விவசாய கேந்திர களஞ்சியங்களில் வைக்கப்பட வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஊ) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை | | |
| | அத்தியாயம் 3 பந்தி 3.4 | - | மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலைகளைக் கோரும் போது குறைந்தது 5 வழங்குநர்களிடமிருந்தேனும் கூறுவிலைகளைக் கோராது 02 நபர்களிடமிருந்து மாத்திரமே கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. |

வேலைகள் மேற்கொள்ளப்பட்ட பல்தொழில் கட்டிடங்கள் மூன்றிற்குப் போதியளவு கட்டுநிதி கிடைக்காமையால் அவை கைவிடப்பட்டிருந்தன. காணியில் பற்றைகள் உருவாகி அதன் காரணமாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலை செதமடைந்தவாறிப்பது அவதானிக்கப்பட்டது.

(இ) ஜாதிக சவிய கமநெகும அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் பலாகல பிரதேச செயலாளர் பிரிவில் 670 ஆண்டியாகல வாரச் சந்தையில் கழிவறைக் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டின் வேலை விடயம் இலக்கம் 13க்கமைய 14 அங்குலச் சுற்றளவுடைய பீ.வீ.சீ குழாய்கள் வழங்கப்பட்டுப் பொருத்தப்படுகையில் 8 மீட்டர் நீளம் அதிகளவு மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 12,520 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.11 செயற்திறன்

---------------------

மாவட்டச் செயலகத்திற்கான தொலைநோக்கும் பணிகளும் நிறைவேறுதற்குரிய யாக்கத் திட்டமும் அந்த யாக்கத் திட்டத்திற்குரிய மீளாய்வாண்டின் அமுலாக்கப்பட எதிர்பார்க்கப்படும் பணிகளும் உள்ளடங்கிய 2010 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 4.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

அனுராதபுரம் மாவட்ட சமுர்த்தி அதிகார சபை அலுவலகத்தால் ரூபா 8,095,012 மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 5 சமுர்த்தி வங்கிகளை நிர்மாணிப்பதற்காகக் குறித்த காணிகளை முறைப்படி சுவீகரிக்காது 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,987,079 கொடுப்பனவு செய்திருந்தது. சில வங்கிக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்ட காணிகள் சுவீகரிக்கப்பட முடியாதனவாக இருந்தமை புலனாயிற்று.

### 4.13 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

-----------------------------------------------------------

மாதிரிச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட செயற்பாட்டு வினைத்திறமையின்மையின் பொழிப்பொன்று கீழே காணப்படுகின்றது.

(அ) ஓய்வுபெற்றவரும் அவரில் தங்கியிருந்தோரும் இறந்து விட்டமையால் அறவிடப்பட முடியாதிருந்த கிழக்கு நுவரகம்பலாத பிரதேச செயலகத்தால்

ரூபா 114,000 க்கான காசோலையை 2010 டிசெம்பர் 31 அன்று வழங்கியிருந்தது. எனினும், அச் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஐ) மாவட்டச் செயலகம் முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 467,522 கூட்டுப் பெறுமதியுடைய 2 கணனிகள், நடமாடும் தொலைபேசிகள் மற்றும் குளிரூட்டிகள் என்பன ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையில் (குறிப்பு 1) 2010 ஜனவரி 1 இல் உள்ளவாறு சீராக்கல் செய்யப்பட்டுக் காட்டப்படவில்லை.

### 4.14 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| ஊழியர் வகையறா | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 72 | 52 | 20 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 46 | 17 | 29 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 1,349 | 1,091 | 258 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 225 | 196 | 29 |
| | மொத்தம் | 1,692 | 1,356 | 336 |

### 4.15 உள்ளகக் கட்டுப்பாடு

கல்னேவ பிரதேச செயலகத்தின் கெப் வண்டிக்கும் ரம்பேவ பிரதேச செயலகத்தின் வாகனத்திற்கும் எரிபொருள் கட்டளைகளை வழங்கும்போது எரிபொருளுக்கான தேவை